1984 மார்ச் 31]

படமா என்பதைப் பற்றி, அந்த தூரத்தைப் பொறுத்து, நாம் நடவடிக்கை எடுக்கலாம். எப்படிப்பட்ட படங்கள் காட்டப்பட வேண்டும் என்பதற்கு அரசாங்கமே ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற முறையில், முறையான நல்ல படங்கள் போட முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பேருந்துகளுக்கு பெருவாரியான நஷ்டத்தை உண்டாக்குகிற முறையில் ஆம்னி பஸ் என்ற முறையில்எந்த நேரத்திலும் ஓடிக்கொண்டு இருக்கிறதே, அதைக் கட்டு படுத்தி, குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் அனுமதித்து, அரசுப் பேருந்துகளுக்கு அதிகமான வருவாய் வருவதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு நேரத்தை நம்மால் நிர்ணயிக்க முடியாது. காரணம், அவர்கள் அப்படிப்பட்ட உரிமத்தை வழங்கியிருக்கிறார்கள். வேண்டுமானால், ஒட்டுமொத்தமாக இந்த கனரக வண்டிகள் இரவு நேரத்தில் ஓட்டக் கூடாது என்று நாம் தடை விதிக்கலாம். அப்படி விதித்தால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமும் சேர்ந்து பாதிக்கப்படும். அதற்குப் பின்பு நீங்கள் எல்லாம் வருவதற்கு நேரம் ஆகும்.

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்.

527—(*வினா எண். 21601) திரு பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துப் பேருந்துகள்—பயணிகள் பயணம் செய்ய இயலாத அளவுக்குப் பழுதுகள் நிறைந்துள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) புதிய பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) தற்பொழுது பேருந்துகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு சிறப்பாக இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் 1983–84 ஆம் ஆண்டில் 60 புதிய பேருந்துகளை பழைய பேருந்துகளுக்குப் பதிலாக மாற்றி வழித்தடங்களில் விட்டு உள்ளது. மேலும் 1984–85-ல் 100 புதிய பேருந்துகள் விட உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

திரு. பாபு ஜனார்த்தனன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்தில் புதிதாக பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். ஆனால் இன்னும் பல இடங்களில்,—பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இருந்து பிரித்த நேரத்தில், அதிலேயிருந்த பாழடிக்கப்பட்ட பேருந்துகள் எல்லாம் இந்தப் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்குக் கொடுத்துவிட்ட காரணத்தால்—எங்கள் பகுதியில் இருக்கின்ற, 203ஏ, 203-பி, 110-ஊ போன்ற பல்வேறு பஸ்கள் இன்னும் பழுதடைந்த நிலையில்தான் ஓடிக்கொண்டு இருக்கின்றன. நானே பிரயாணம் செய்கின்ற நேரத்தில் நடுவழியில் நிற்கின்ற நிலைமை உருவாகக்கூடிய அளவில் இருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் உள்ள பல்வேறு பேருந்துகள் பல்வேறு இடங்களில் வழியில் நின்றுவிடுகின்றன. ஆகவே எல்லாவற்றையும் துரிதமாக புதிதாக மாற்றுவதற்கு அரசு முயற்சி செய்யுமா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே 60 பேருந்துகள் அங்கே புதிதாக மாற்றியிருக்கிறோம். மேலும் 100 பேருந்துகளை மாற்றவேண்டும் என்று உத்தேசித்துள்ளோம். அதைப் பிரிக்கிறபோது இதற்கு பழைய வண்டிகளாக பிரித்து விட்டார்கள் என்பது உண்மை. எனவே தான் அந்தப் பகுதியில் மட்டும், கொஞ்சம் பழைய பேருந்துகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அதை மிக விரைவாகச் செய்யவேண்டும் என்ற ஆர்வம் எங்களுக்கு இருக்கிறது. இந்த கூண்டுகள் கட்டுகின்ற கெப்பாசிட்டி மிகக் குறைச்சலாக இருக்கின்றது. எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலேயும் அது குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பு நமக்கு இல்லை. வெளியிலே கொடுத்து கூண்டு கட்டக்கூடாது என்ற காரணத்தால், படிப்படியாகச் செய்ய வேண்டிய முயற்சியை நாம் எடுத்து வருகிறோம்.

(முற்பகல் 9-40)

திரு தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக புதிய பேருந்துகளை வழித் தடங்களில் விட முடியவில்லை என்றாலும், அன்-சொர்வ்ட் ஏரியாக்களிலும், அன்-எக்கானமிக் ரூட்டுகளிலும் மக்களுடைய தேவையை கருதியும் நிர்வாகத்தினுடைய சிக்கத்தைக் கருதியும், மினி பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மினி பஸ்களை ஏதோ செலவு குறைவாக ஏற்படும் என்பதற்காக விடப்படுவதில்லை. எங்கெங்கே பெரிய பேருந்துகள்

1984 மார்ச் 31]

போக முடியாதோ அந்த இடங்களுக்குத்தான் விட வேண்டும். முக்கியமான இடங்களில் பேருந்து அதிகமாக விட வேண்டியது அவசியம் என்று இருந்தால், அந்த இடத்திற்கு பெரிய பேருந்து களை விடலாம். பெரிய பேருந்துகள் போக முடியாத நிலைமை இருக்குமானால், மினி பஸ்களை விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய பேருந்துகளை விடுவதற்கு பைனான்சியல் ஒதுக்கீடு மிக குறைவாக இருக்கிறது என்று தகவல் வருகிறது. அவ்வாறு இல்லாமல் நல்ல முறையில் ஒதுக்கீடு செய்து, புதிய பேருந்துகளை விட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் இவ்வளவு பேருந்துகளை மாற்றுப் பேருந்துகளாக விடலாம் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். அதிலே பட்டுக்கோட்டைக்காக இந்த ஆண்டு 100 பேருந்துகளை நிர்ணயம் செய்திருக்கிறோம். இந்த 100 பேருந்துகளுக்கு மேலே கூண்டு கட்டுகிற சூழ்நிலை இல்லாத காரணத்தினால், அந்த அளவிற்குத்தான் கெப்பாசிட்டி இருக்கிறது என்ற காரணத்தினால் 100 என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். அதிகமாகக் கூண்டு கட்டுகிற நிலைமை இருக்குமானால், இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகமாக ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 528, 529 மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

பிரமலைக்கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்.

530—(வினா எண். 18365) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரமலைக்கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீடுகள் வழங்கும்போது 1,075 ரூபாய் முதலில் அரசுக்கு கட்ட வேண்டும் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தொகையில் 1,000 ரூபாயை அரசு கடனாகக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம்.